# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 42 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 42


## ஜலப்பிரளயம் நேரிட்டபோது

மாம்சமான யாவராலும் பூமி கொடுமையினால் நிறைந்தது. தேவன் அவர்களை பூமியோடு கூட அழித்து போடும் படியாக தம்முடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தினார் என்பதை நாம் வரலாற்றில் உலக சரித்திரத்திலேயே காண்கிறோம்.மனுஷர்கள் பூமியிலே பெருகத் தொடங்கின போது அவர்களுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் தான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியிலே வைக்காமல் நிக்கிரகம் பண்ணுவேன் என்றார் (ஆதி 6 : 5 – 7).

மனுஷருக்குள்ளே பாவம் பெருகியதால் தேவ குமாரர் மனுஷகுமாரத்திகளை தங்களுக்கு மனைவிகளாக தெரிந்துகொண்டார்கள் (ஆதி 6 : 1 – 2) .பரலோகத்தின் தேவனை தொழுது கொள்ளும் ஜனங்களை உடைய சேத் வம்சத்தினர் தான் தேவகுமாரராய் காணப்பட்டனர். ஆனால் அவர்களோ காயீன் வம்சத்தினரான விக்கிரகங்களை வணங்கும் தேவ பயமற்ற மனுஷகுமாரத்திகளை தங்களுக்கு தெரிந்து கொண்டார்கள். நாம் வாழும் இந்த நாட்களிலும் கூட தேவனுக்கு பிரியமில்லாத விசுவாசியான கூட்டத்தாரை சில விவாகம் செய்கிறார்கள். அதன் விளைவு தேவனோடு அவர்களுக்கு இருந்த ஆவிக்குரிய ஐக்கியத்தில் வீழ்ந்து போக நேரிடும். மேலும் நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி 6 : 8). ஏனெனில் நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்தார் ஆகவே தேவன் நோவாவும் அவருடைய குடும்பமும் வரப்போகும் அழிவினின்று காக்கப்படும்படி தேவன் அனுக்கிரகம் பாராட்டினார். பூமியில் உள்ள யாவும் மாண்டு போகும்படி வரப் போகும் ஜலப் பிரளயத்தினின்று தப்பும்படியாய் ஒரு பேழையை உண்டாக்க கர்த்தர் நோவாவுக்கு கட்டளையிட்டார்.நோவா அக்காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு நீதியைப் பிரசங்கித்தார். வரப்போகும் அழிவைக் குறித்தும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்தும் ஜனங்களை எச்சரித்து செய்தியை அறிவித்தார் .



அந்த வேலையை செய்யும் போது நிறைய எதிர்ப்புகளை யும், அவமானங்களையும் சந்திக்க நேர்ந்திருக்கலாம். ஆனாலும் அந்த விசுவாசத் தோடு பல ஆண்டுகளாக பேழையை கட்டும் பணியை ஓய்வின்றி செய்து முடித்தார். குறிப்பிட்ட ஒரு நாளில் எல்லா மிருக ஜீவன்களும் காப்பாற்ற படும்படியாக தேவன் நோவாவை நோக்கி நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள் (ஆதி 7 : 1) என்றார். இன்னும் ஏழுநாள் சென்றபின்பு நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப் பண்ணுவேன் என்றார் (4)

கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார். நோவாவுக்கு 600 வயதாகும் வருஷம், அந்நாளிலே மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறந்தன. அப்படிப்பட்ட ஒரு ஜலப்பிரளயம் அதற்கு முன் பூமியில் உண்டானதில்லை. தேவன் தாம் சொன்னதை செய்தார். பேழைக்குள் இருந்தவர்களாகிய நோவாவின் குடும்பத்தாரை தவிர வேறொருவரும் ஜலப்பிரளயத்தினின்று தப்பவில்லை. சர்வ வல்லமையுள்ள தேவனை ஏற்றுக்கொள்ளாத யாவரும் மாண்டனர்.

**ஜனங்கள் தேவ எச்சரிப்பை பெற்றும்.. தேவனுக்கு நேராக தங்கள் இருதயத்தை திருப்பாமல், தேவ வார்த்தையை புறக்கணித்தார்கள் எப்படியானாலும் ஒரு நாள் வானத்தில் இருந்து மழை பெய்தது**


| தலையங்கம் | வேதபாடம் | துணை கட்டுரை | பரிசுத்த பங்களிப்பு | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5 - 6 | 7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

பேழையை கட்டிக் கொண்டிருக்கும்போது அதை தம் கண்களால் கண்ட மனிதர்களுக்கு இந்த காட்சி எப்படி இருந்திருக்கும்? தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பைக் கேட்டும், தங்கள் இருதயத்தை திருப்பாமல் ஜீவனுள்ள தேவனை மறந்தார்கள். எனினும் ஒருநாள் வானத்திலிருந்து ஒரு மழைத்துளி விழுந்தது, தண்ணீர் பிரளயம் ஆவதற்கு முன்பே விக்கிரக வணக்கத்தார்,அஞ்ஞானிகள், தேவன் இல்லை என்போர், இவர்களெல்லாம் நோவாவின் பிரசங்கத்தை அப்போது விசுவாசித்தனர். ஆனால் அது மிகவும் தாமதமான புரிந்துகொள்ளுதல்.பேழைக்கு அருகேயும் அநேகர் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த போது, கதவை திறவுங்கள். நாங்களும் வருகிறோம் எங்களை காப்பாற்றுங்கள் என்றெல்லாம் கதறி இருப்பார்கள். இரட்சிப்புக்கான காலத்தை அவர்கள் தவற விட்டுவிட்டார்கள். கதவு அடைபட்டது .காலமோ சென்றது.



**விக்கிரக வணக்கத்தார், அஞ்ஞானிகள், தேவன் இல்லை என்போர், இவர்களெல்லாம் நோவாவின் பிரசங்கத்தை அப்போது விசுவாசித்தனர். ஆனால் அது மிகவும் தாமதமான புரிந்துகொள்ளுதல்.**

நோவாவின் நாட்களில் நடந்தது போலவே, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே நியாயாதிபதியாய் அவர் இந்த பூமியிலே வரும் போதும் நடக்கும். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில் ஜலப்பிரளயத் துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும் பெண் கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள் .அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் (மத்தேயு 24: 37-39).

2 பேதுரு 3: 6-7,10 அப்போது இருந்த உலகம் ஜலப் பிரளயத் தினால் அழிந்ததென்பதையும் இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அக்கினியினால் அழிக்கப்பட போகிறது என்பதையும் அறிந்து உணர்வ டையுங்கள்.ஜெபித்து, இரட்சிக்கப்பட சமயம் இருக்காது, இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட மாட்டாது ,இதுவே தருணம், உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தப்படு, இப்போதே இரட்சிப்பின் பேழைக்குள் பிரவேசியுங்கள். இதோ வாசல் அருகே வந்து விட்டார். உலகமானது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாக உள்ளது. உலகத்திற்கு முடிவு இல்லை என்பது போல பல ஜனங்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய பரிசுத்தவான்களை இந்த உலகம் ஏளனம் செய்கிறது. பரிசுத்தத்தையும் பரிசுத்தமாகுதலையும் குறித்த கோட்பாடுகளை சிறுமையாக எண்ணுகிறார்கள். ஜனங்கள் மாம்ச இச்சைக்கு ஏற்ற தங்கள் சுய வழிகளைத் தேடுகிறார்கள். பாவமும், தீமையும் தேசம் எங்கும் பரவலாக காணப்படுகிறது. அதற்கு முடிவு வந்துவிட்டது. தேவன் தாம் சொன்னபடியே ஜலப்பிரளயத்தை இந்த பூமிக்கு அனுப்பியது போல, தம் குமாரனை உலகத்தின் நியாாயத்தீர்ப்புக்காக அனுப்புவார். அழிவுக்கேதுவான தேவனுடைய அக்கினி இந்த பூமியில் ஊற்றப்பட கூடியதான கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனுஷகுமாரன் நியாயாதிபதியாக இந்த பூமிக்கு வரும்போது மனந்திரும்ப நம்மால் கூடாது .இன்றே அனுக்கிரக காலம் .நீங்கள் நம்புவதற்கு என்ன தேவை? இன்னும் தாமதமாகுமா? காலம் கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* www.thegospeltruth.org *என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி,
பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென் – வெளி 1 : 7

ஒரு நாள், அது வெகு தொலைவில் இல்லை. இயேசுகிறிஸ்து அவர்தம் தூதர்களோடு கூட மேகங்கள் நடுவே வரப்போகிறார். ஒரு இமைப்பொழுதிலே கடைசி எக்காளம் தொனிக்கும் போது, அவ்வளவுதான் காலம் முடிந்தது. எல்லா காலத்தினரும் உயிரோடிருக்கிற நாமும் மரித்தோர் யாவரும் ஒன்றாக வருவார்கள். உலகம் முழுவதிலுமுள்ள யாவருக்கும் ஒரே உயிர்த்தெழுதல், பின்பு யாவரும் ஆட்டுக்குட்டியானவருடைய வெள்ளை சிங்காசனத் திற்கு முன்பாக நிற்க கடவோம். ஜீவ புத்தகம் திறக்கப்பட்டு யாவரும் நியாயந்தீர்க்கப் படுவோம். நீதியுள்ளவர்கள் நித்திய ஜீவனாகிய பரலோக பாக்கியத்தையும், அநீதியுள்ளோர் நித்திய ஆக்கினையான நரகத்திலும் பங்கடைவார்கள்.

இந்த மாத இதழில் சுவிசேஷம் என்பதே எனக்கு பாரமாய் இருக்கிறது. பரிசுத்தவான்களும் பாவிகளும் இனி காலம் செல்லாது என்பதை உணரும் படியான ஒரு ஏவுதல் என் உள்ளத்தில் எழுந்தது. என்னோடு இடைப்பட்ட ஆவியானவரே இதை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவரோடும் பேசுவாராக. இது ஒரு சாதாரண பத்திரிகை அல்லது கோட்பாடு அல்லது செய்தி என்று எண்ணிவிடாதீர்கள். இந்த பூமியிலே நமக்கான காலம் கடைசி காலமாய் இருக்கிறது என்பது தேவனுடைய அழுகுரல். தேவனுடைய வருகை சமீபம். இயேசு திரும்ப சீக்கிரத்தில் வரப்போகிறார்.

இவ்வுலகத்தின் பாவமும் சீர்கேடுகளும் எப்போதுமே கர்த்தருக்கு முன்பாக இருந்து கொண்டிருக்கிறது. சோதோம் கொமோரா பாவங்களும் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் அக்கினிக்கு இரையானது. நீங்கள் இரட்சிக்கப்பட்டு உங்கள் வாழ்வை காத்துக்கொள்ளுங்கள். முழு இருதயத்தோடு தேவனைத் தேடாதவர்களாய் நீங்கள் இருப்பீர்களானால் இன்றே திரும்புங்கள். உங்கள் இருதயத்தை தாழ்த்தி, தேவனுடைய இரக்கத்தை கெஞ்சி மன்றாடுங்கள். பின்வாங்கிப் போன இருதயத்தாரே இன்றே மனந்திரும்புங்கள். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டாலொழிய வேறு வழி இல்லை . நம் சபையின் பெயராலோ, குடும்ப பெயராலோ, நற்பெயராலோ, சபை ஐக்கியத்தில் ஒருவர் என்றோ மறைந்து கொள்ள முடியாது. திறந்த உள்ளத்தோடும், உண்மையோடும் தேவனுக்கு முன்பாக நம் பாவங்களை அறிக்கையிட்டு, பரலோகத்தின் தேவனிடத்தில் ஒப்புரவாவோம்?

நாமும் இரண்டாயிரத்து இருபத்திரண்டு  வருடங்களாகவே இயேசு எப்போது வருவார் என்று அறியாமல் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் முன்பு போலல்லாது வெகு அருகில் வந்துவிட்டோம். காலம் ஓடிக் கொண்டே இருக்கிறது என்பது முக்கியம். எச்சரிப்பிற்கு செவிகொடுங்கள். நாளை வரும் என நினைக்க வேண்டாம். இருதயத்தில் தாழ்மைப் படுங்கள். உறவுகளுக்குள் இருக்கும் விரிசல்கள் சரி செய்யப்படட்டும். தீய காரியங்கள் அகற்றப்படட்டும். பாவத்தை விட்டு விலக வேண்டும். நான் எச்சரிக்கிறேன் என்று எண்ணாதீர்கள். தேவசத்தத்தை அறிவிக்கிறேன்.

நம்மை ஆயத்தப்படுத்துவோம்.காலம் கடந்து விட்டது. இன்றே கடைசி நாள் என்று எண்ணுங்கள். வேறொரு நாள் பிறப்பதை அறிய மாட்டோம்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து
வெளியீட்டு
காப்பகங்களுக்குள்
உள்நுழைக

**நான் மரிப்பேன் ஆனால் எப்போது ?**
**நான் தேவனை சந்திப்பேன் ஆனால் எப்படி ?**
**நான் நித்தியத்தில் வாழ்வேன் ஆனால் எங்கே ?**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : முடிவு நெருங்கி விட்டது

**வேத வாசிப்பு :** நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் மத்தேயு 24 : 44

**செய்திச் சுருக்கம் :** வேதத்தின் அடிப்படையிலும் தேவனுடைய காலங்கள் மற்றும் நியாயத் தீர்ப்பின் பிரகாரம் ஆகும் காலம் கடந்து போய்க் கொண்டிருக்கிறது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக மிக சமீபம். தேவனை சந்திக்க ஆயத்தப்படுங்கள்.

### I.விளக்கமான உவமை

பத்து கன்னிகைகள் (மத்தேயு 25 : 1 – 13)

### II. நியாயத்தீர்ப்பின் முறையும் காலமும்

A.ஆதாம் ஏவாள் ஜலப்பிரளயம் – 1656 வருடங்கள்

B. ஜலப்பிரளயம் – மோசேயின் நியாயப்பிரமாணம் 900

C. மோசேயின் நியாய பிரமாணம் – கிறிஸ்துவின் மரணம் 1500

D. கிறிஸ்துவின் மரணம் –நிகழ்காலம் 2022

### III. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு

A. லூக் 17 : 26 – 29 நோவாவின் நாட்களில் நடந்தது போல

B. ரோம 14 : 10 – 12 எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயத்திற்கு முன்பாக நிற்போம்

### IV. காலமோ எதிர்பாராமல் முடிந்துவிடும்

A. வெளி 16 : 15 இதோ திருடனைப்போல் வருகிறேன்

B. 1 தெச 5 : 1 – 3 சமாதானமும் சவுக்கியமும் அழிவு சடுதியாய் வரும்

### V. அந்த நாளும் நாழிகையும்

A.மத் 24 : 36 பிதா ஒருவரே அறிவார்

B. அப் 17 : 30–31 ஒரு நாளை குறித்திருக்கிறார்

C.எபி 9 : 27 ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு நியமிக்கப்பட்டு இருக்கிறதே

D. லூக் 12 : 16–21 உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்

### VI. முடிவு அதிக சமீபம்

A.ரோமர் 13 : 11 நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாய் இருந்ததை பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது

B.1 பேதுரு 4 : 7 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று

C.வெளி 22 : 20 மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்

### VII. முடிவு காரியங்கள்

A.2 பேது 3 : 3 –9 பரியாசக்காரர் வந்து தங்கள் சுய இச்சைப்படி நடப்பார்கள் .தேவன் நம்மில் நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார்

B.2 பேது 3 : 10– 12 நீங்கள் எப்படிப்பட்ட நடத்தை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்

**முடிவு :**

நீர் உமது வீட்டு காரியத்தை ஒழுங்கு படுத்தும் நீர் மரிப்பீர் ஏசாயா 38 : 1

### வேத சரித்திரத்தின் அடிப்படையில் அமைந்த நியாயத்தீர்ப்பின் முறைகளும் காலங்களும்

**ஆதாம் & ஏவாள் | ஜலப்பிரளயம் | மோசே பிரமாணம் | கிறிஸ்து மரணம் | நிகழ்காலம்**



**~ 1656 வருடங்கள் | <900 வருடங்கள் | <1500 வருடங்கள் | <2022 வருடங்கள்**

# காலம்
# சமீபமாயிருக்கிறது



**சூரியன் உதிக்கிறது மற்றும் சூரியன் மறைகிறது. கடிகாரத்தின் முள் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஜனங்களும் இன்னொரு நாள், இன்னொரு தருணம், நாளை வரும் என்றே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எப்படியாயினும் நித்தியத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோம். காலத்தின் அருமையை உணராது இருக்கிறோம்.**

### கிறிஸ்து மீண்டும் வருவார்

இயேசு மீண்டும் வரப்போகிறார். இந்த உலகம் அழிந்து போகும். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். நித்திய நித்தியமான பரலோகமா அல்லது நரகமா என்று தீர்மானிப்பதற்கான தருணம். காலம் உங்களுக்காக பொறுத்திருக்காது. நீங்கள் ஆயத்தமா?

### 10 கன்னிகைகள்


மத் 25 : 1 – 13– ல் இயேசு பத்து கன்னிகைகளை குறித்த உண்மையை கூறி இருக்கிறார். புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளையும், புத்தியில்லாத ஐந்து கன்னிகை களையும் குறித்து விளக்கப்பட்டுள்ளது. மணவாளன் வர காத்திருக்கும் ஒவ்வொரு கன்னிகையும் புத்தியுள்ளவர்கள். அவர்களில் ஐந்து கன்னிகைகள் ஞானமாய் தங்களை உலகத்தினின்று நீதி உள்ளவர்களாக மாற்றிக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் கைகளில் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் எண்ணெயையோ கொண்டு போகவில்லை. அவர்கள் பெயரில் உள்ள அன்பினால் விரைந்து புறப்பட்டார்கள். தேவனுடைய கிருபையும், பரிசுத்த ஆவியின் வல்லமையையும் சுதந்தரித்தும் அதை இழந்து போய் விடக்கூடாது. பிரகாசமாக தீவட்டி எரிந்தாலும் எண்ணெய் இல்லாமையினாலும் விளக்கு அணைந்து போகும். . அதுதான் இன்று அநேக பெயர்க்கிறிஸ்தவர்களின் வாழ்க்கையாய் இருக்கிறது.

மணவாளன் வரத் தாமதித்த போது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்(5). மணவாளன் வரத் தாமதிக்கிறார் எனில் இயேசுவின் வருகை தாமதிக்கிறது என்பதை குறிக்கிறது.அவர் தாமதிக்கையில் கன்னிகைகள் நித்திரை மயக்க மடைந்து தூங்கிவிட்டார்கள். நடு ராத்திரியிலே ஐந்து தீவட்டிகள் மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. அது நித்திரையான அசதியான வேளை. உவமையின் முக்கியமான ஒரு காரியம் தூங்கிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்குள்ளும் சிலர் எப்போதும் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி விழித்திருக்கிறார்கள். கர்த்தருடைய இரண்டாம் வருகையை சந்திக்க எச்சரிப்பு பெற்று விழித்தெழுங்கள்.

நடுராத்திரியில், இதோ மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டு போக புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று (6).அது நடு ராத்திரி. உலகம் பாவம் மற்றும் வஞ்சனையால் மூடப்பட்டுள்ளதால், ஜனங்கள் வாழ்வினின்று கர்த்தர் தள்ளப்பட்டு விட்டார். கிறிஸ்துவின் பேரிலுள்ள பரிசுத்தத்தையும் ,தெய்வ பக்தியையும் முழுமனதோடு அர்ப்பணிக் காமல், தங்கள் சுய வழியை நாடுகிறார்கள். இருளான உலகிலும் கிறிஸ்துவின் வருகையில் எக்காளம் தொனிக்கும் ஓசை உங்கள் காதுகளில் கேட்க வேண்டும். ஆவிக்குரிய உலகில் சீக்கிரமாக முடிவு உண்டாகும். இனி காலம் செல்லாது.

மணவாளன் வருகையிலே புத்தியில்லாத கன்னிகைகள் புத்தியுள்ளவர்களை நோக்கி உங்கள் எண்ணையிலே எங்களுக்கு கொஞ்சம் தாருங்கள் என்றனர். ஆனால் அவர்களுக்கோ கொடுக்கப்படவில்லை. உவமையில் சொல்லப்பட்டதை போல தேவனுக்கு முன்பாக, நம் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய வாழ்வுக்கும் நாமே பொறுப்பு அனுதினமும் அவரோடு வாழ்ந்து ஆயத்தமாய் இருப்போம்.

புத்தியில்லாத கன்னிகைகளோ எண்ணை வாங்கும்படி சென்று விட்டார்கள். கதவு அடைக்கப்பட்டு விட்டது (10). இயேசு வந்த பிறகு காலம் செல்லாது. இனி ஒரு தருணம் ஜெபிக்கும் படியாக இல்லை.தவறுகளை சரிசெய்ய இல்லை முக்கியமானவைகளை ஒழுங்குபடுத்த இல்லை, தவறுகளை சரிசெய்ய வழி இல்லை. ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நேரமில்லை. நாம் உண்மையாய் அவரை சந்திக்கும் நாழிகையிலே நிற்க கடவோம். எங்களுக்கு கதவை திறக்க வேண்டும் என்று சத்தமிட்டார்கள். ஆம் நோவாவின் நாட்களில்,ஜலப்பிரளயத்தின் போது ஜனங்கள் சத்தமிட்டதைப் போல இந்த உவமையில் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு அவர் உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (12 – 13).



**இப்போது நீங்கள் வாசித்து கொண்டிருப் பதைப்போல இன்னொரு எச்சரிப்பு கிறிஸ்துவின் வருகையில் கொடுக்கப்படாது அது எதிர்பாராததும் சடிதியாயும் உண்டாகும்**

### நியாயத்தீர்ப்பின் முறை

இன்னொரு வருடத்திற்கான உத்தரவாதமில்லை நாளைய தினத்தை குறித்த பெருமை இல்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வழிகளையும் காலங்களையும் ஒருவர் அறிவாரானால் காலம் கடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். ஆதாம் ஏவாள் பாவம் செய்த பின் ஏறத்தாழ 1656 வருடங்களில் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் ஏற்பட்ட ஜலப்பிரளயம் ஜனங்களை அழித்தது.

ஜலப் பிரளயத்திற்கு பிறகு ஏறத்தாழ 900 வருடங்களுக்குப் பின், தேவன் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலம் ஜனங்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த நியாயப்பிரமாணம் ஏறத்தாழ 1500 ஆண்டுகள் வரையிலும், இயேசுகிறிஸ்துவின் கிருபை வெளிப்படும் முன் வரை நின்றது. பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்க இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து ஏறத்தாழ 2022 ஆண்டுகள் ஆகிவிட்டது.

### இன்னும் எவ்வளவு காலம்

முழு உலகமும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாததால் பாவம் சூழ்ந்தது. நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும் (லூக் 17 : 26). இன்னும் எவ்வளவு காலம்? ஜனங்கள் புசித்தார்கள். குடித்தார்கள். கொண்டார்கள். விற்றார்கள். நட்டார்கள்.கட்டினார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. கர்த்தர் வருகையில் முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும் (கிறிஸ்து). நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் (ரோமர் 14 : 11). ஆதலால் சீக்கிரத்தில் வெளிப்படப் போகிறதான நியாயத்தீர்ப்பிலே நம்மில் ஒவ்வொருவரும் தன்னை குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான்

### சடிதியான முடிவு

காலம் திடீரென்று முடிந்துபோகும். தேவன் சடிதியாய் வருவார். இதோ திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களை காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான் (வெளி 16 : 15). நீங்கள் கறையற்ற உங்கள் பரிசுத்த வஸ்திரத்தை காத்துக்கொண்டு உள்ளீர்களா அல்லது பாவக்கறையோடு வாழ்ந்து வருகிறீர்களா? சகோதரரே, இவைகள் நடக்குங்காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. (1 தெச 5 : 1 – 3). அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.மத்தேயு 24 : 36 சில ஊழியர்களும் ஊழிய ஸ்தாபனங்களும் கர்த்தருடைய வருகையின் நாளைக் குறித்து தீர்க்கதரிசனமாக கூறுகிறார்கள். இது மாம்சத்தின் அறிக்கையே அல்லாமல் வேதத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல ஏனெனில் அந்த நாளை பிதா ஒருவரே அறிவார் என வேதம் தெளிவாக குறிப்பிடுகிறது. எப்படி ஆனாலும் கடைசி நாளில் சம்பவிக்கும் காரியங்களை குறித்து முன்பே நம்மை எச்சரித்திருக்கிறார்.

### ஒரு நாளைக் குறித்து இருத்தல்

(அப்போ 17 : 31) மேலும் ஒரு நாளைக் குறித்து இருக்கிறார். பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். காலங்களைக் குறித்தும் அடையாளங் களையும் குறித்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. லூக் 12 : 16 – 21 ல் இயேசு கூறிய உவமையில் ஒரு ஐசுவரியவான் தன் எதிர்காலத்திற்கு ஒரு பெரிய திட்டத்தை தன் மனதில் நியமித்தான். இளைப்பாறி, புசித்துக் குடித்து பூரிப்பாய் இரு என்று தன் ஆத்துமாவோடே சொல்லிய அவனை நோக்கி உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும் (20). அந்த மனிதன் தேவனை சந்திக்க ஆயத்தம் இல்லாதவன் இன்று இரவு தேவன் வராவிட்டால் அது உங்களுக்கு கொடுக்கப்பட்ட இன்னொரு தருணமாய் கொள்ளுங்கள். தேவன் வரக்கூடிய நாளை நீங்கள் அறியாததினால் உங்கள் ஆத்துமாவை ஆயத்தப்படுத்தி தயாராகுங்கள்

### மெய்யாகவே நான் சீக்கிரமாக வருகிறேன்

முடிவு சமீபமாயிற்று. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருங்கள் (1 பேது 4 : 7) இரண்டாயிரத்து இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே கிறிஸ்து யோவானுக்கு தரிசனத்தில் சாட்சியாக வெளிப்படுத்தினார். இவைகளை சாட்சியாக அறிவிப்பவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் (வெளி 22 : 20) இப்போது அவர் எங்கே இருக்கிறார்? அவர் வாசல் அருகே நின்று கொண்டிருக்கிறார்.

கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? (2 பேது 3 : 3 – 4) வெகு காலங்கள் சென்றிருந்தாலும், பேதுரு திட்டமாய் என்ன கூறுகிறாரெனில், பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே, உலகம் ஜலப்பிரளயத் தினால் அழிந்தது என்பதையும் அதே போல் இந்த பூமி அக்கினிக்கு இணையாக வைக்கப்படும். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார் (9)

### அவர் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்

இப்படி இவைகள் எல்லாம் அழிந்து போகிறதாய் இருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2 பேது 3 : 11). காலம் நிறைவேறிற்று. கிறிஸ்து எப்போது வேண்டுமானாலும் திரும்ப வருவார். நீங்கள் ஆயத்தமா? இல்லையேல் இதுவே தருணம். முழு இருதயத்தோடு மனந்திரும்புங்கள். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள ஆயத்தப் படுங்கள். இன்று ஆயத்தப்படவில்லை எனில் நாளை என்பது நிச்சயமல்ல. ■

# பரிசுத்த பங்களிப்பு

(வேதபாடங்கள், பகுதி 17, எண் 4, 1985)

லெஸ்லி. சீ.பஸ்பி




பேதுரு, பவுல் மற்றும் யாக்கோபு இவர்களின் தீர்க்கதரிசனங்கலிருந்து இயேசுவின் இரண்டாம் வருகையை அறிந்திருக்கிறோம்.இந்த பெரிதும் பயங்கரமான நாளை நோக்கியே தான் இவர்களுடைய பயணங்கள் இருந்தது. அவர் தாம் சொன்னபடியே மீண்டும் இந்த பூமிக்கு திரும்ப வருவார். நாம் நினைப்பதை விட இந்த நாள் மிக சமீபம். சமாதானமும் சௌக்கியமும் உண்டு என்று அவர்கள் சொல்லும் போது அறிவு சரியாய் அவர்கள் மேல் வரும் இன்று உலகளாவிய ஒவ்வொரு மனிதனும் விரும்புவது ஆரோக்கியமும் சமாதானமுமே. இந்த தீமையான உலகில் ஒவ்வொருவரும் தங்களை எப்படி பாதுகாத்துக் கொண்டு செல்வச் செழிப்போடு வாழ்கிறார்கள் என்பதைக் குறித்து நாம் கவனிக்கத் தேவையில்லை. இவையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் அழிந்துபோகும். கிறிஸ்துவின் வருகையின்போது இந்த உலகம் அழிக்கப்படும். வேறு எந்த சந்தர்ப்பமும் கொடுக்கப்பட மாட்டாது. இயேசு வரும்போது மரித்தவர்கள், உயிரோடு எழும்புவார்கள். பரிசுத்தவான்கள் துன்மார்க்கர், நீதியுள்ளோர், அநீதியுள்ளவர், நன்மைசெய்தோர் , தீமை செய்தோர் யாவரும் எழுந்திருப்பர். இவையெல்லாம் ஒரே சமயத்தில் நடக்கும். தேவனை அறியாத அவர்களையும் நியாயந் தீர்க்கவும் தம் பரிசுத்தவான்களில் மகிமைப்படும் படியாகவும் அவர் திரும்ப வருகிறார் . துன்மார்க்கருக்கும், நீதிமான்களுக்கும் உயிர்த்தெழுதல் ஒரே மாதிரியாக இருக்கும். நாம் ஆயத்தமாக இருந்தால் இயேசு கிறிஸ்து உடன் செல்லலாம். எல்லா கசப்பும் வெறுப்பும் நம் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். தேவ குமாரன் இயேசு கிறிஸ்துவின் முன் பரிசுத்தமுள்ளவர்களாய் நிற்க வேண்டும்.

ஒவ்வொரு தேவ பிள்ளையின் விருப்பமும் அந்த பெரிதும் பயங்கரமுமான நாளை எதிர்பார்த்துதான். ஒவ்வொரு நாளும் நம் எண்ணங்களில் அந்த நாள் இருக்க வேண்டும். இன்றைய நாள் இந்த உலகத்தின் இச்சைகளை விட்டு விலகி மேலான பரலோகத்தை நாடவேண்டும்.

பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற கிறிஸ்துவும் அந்த குறிப்பிட்ட நாளில் திரும்பி வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படி ஒரேதரம் பலியிடப்பட்டு,தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி 9 :28).தேவனை தரிசிக்க வாஞ்சிக்கும் யாவருக்கும் நீதியின் கிரீடம் இது முதல் என்றைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். ஓ! மகா ஆரவாரத்தோடும், தொனியோடும், மேகங்கள் நடுவே வரப்போகும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான பிரசன்னத்தை கண்டு மகிழ நம் உள்ளத்திலும் மனதிலும் இயேசுவை முழுமையாக ஏற்றுக் கொள்வோம். அவருக்கு முன்பதாக கரையற்ற மாசற்ற பரிசுத்தமாய் நடப்போம் இதுவே நம்முடைய பரிசுத்தமான நடக்கை. லூக் 21 : 36 ல் இயேசு பின்வருமாறு கூறுகிறார். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.

வரப்போகும் அழிவினின்று காத்துக் கொள்ளப்பட்டு பின்பு பார்க்கலாம் எண்ணப்படுவோம். நமக்கு முன்பதாக மரித்த பரிசுத்தவான்கள் யாவரும் உயிரோடு எழுந்திருப்பார்கள். இந்த பழைய பூமி கிரகமானது முற்றிலும் அழிக்கப்படும். கர்த்தருடைய வருகை இருபது வருடங்கள் தாமதமானால் நம்மால் மிகவும் சமீபத்தில் இருப்பதை உணரமுடியும் பத்து வருடங்கள் என்றால் இன்னும் சமீபம். ஐந்து வருடங்கள் எனில் மிக மிக சமீபம். இவை காலத்தின் எச்சரிக்கை. சீக்கிரமாக இயேசு திரும்ப வருவார். தேவனுடைய வருகை வரையிலும் அன்பையும் பொறுமையையும் காத்துக்கொள்ள தேவன் நம் இருதயத்தை ஸ்திரப்படுத்துவாராக. ■



**இன்றே அனுக்கிரக நாள், மேலான பரலோகத்தின் பொக்கிஷத்தை நாடாமல், எப்படி நம் இருதயமும் மனமும் இந்த தீமையான உலகத்தில் நிலை கொண்டிருக்கிறது என்று சிந்தியுங்கள்**

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

புதிய ஏற்பாட்டில் எங்கும் சொல்லப்பட்டிருக்கும் ஒரு முக்கியமான காரியம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்பே எட்டு முறைக்கும் மேலாக கர்த்தருடைய இரண்டாம் வருகை குறித்து வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 300 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. (இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய இந்த உண்மை 20-09-2022 ம் வருட கிறிஸ்டியன் கூரியர் என்ற பத்திகையில் எடுக்கப்பட்டது).

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## கர்த்தருடைய வருகைக்கு பொறுமையோடு காத்திருப்போம்

நீங்களும் நீடிய பொறுமையோடே இருந்து உங்கள் இருதயங்களை திடப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது - யாக்கோபு 5 : 8



பாவம் சூழ்ந்த கண்ணீர் நிறைந்த போராட்டமான வாழ்வில் தேவ பிள்ளைகளாகிய நாம் பிரகாசமான ஆச்சரியமான ஒரு நாளை நாம் எதிர்பார்த்து காத்திருக்கிறோம் இரட்சிக்கப்பட்ட ஒருவருக்கு கர்த்தருடைய வருகை பயத்தை தராது நமது நித்திய பரலோகத்தை காண மேகங்கள் நடுவே வரும் நம் கர்த்தரின் நாளில் வாழ்கிறோம் இனி அழுகை இல்லை வேதனை இல்லை. இல்லை இல்லை அன்பானவர்களின் இழப்பை குறித்த வேதனை இல்லை நமக்காக மீட்பர் பெற்றுத்தந்த இயேசுவின் பிரசன்னத்தில் இருப்பது எவ்வளவு பாக்கியம்

ஒரு பாடலின் வரிகள்: இதோ நான் காத்திருக்கிறேன் தேவனுடைய அழைப்புக்கு ஆவலாயிருக்கிறேன். சோதனை பாடுகளினின்று நான் விடுதலை பெற்ற மேன்மையான பரலோகின் அழகை என்றென்றும் காணும் மேலான பாக்கியத்தை ஏசுவுடன் ஆளுகை செய்யும் சிலாக்கியத்தை பெற்றேன். பரலோகத்தில் இருக்கும் அந்த நாள் என்பதால் இப்போது நாம் அங்கே இல்லை உலகத்தின் பாடுகளும் போராட்டங்களும் இருள் போன்று நம்மை நெருங்கினாலும் முடிவே இல்லை என்று தோன்றினாலும் விசுவாசத்தில் தளர்ந்து போகாமல் கடைசிவரையிலும் காத்துக் கொள்வோம். சிலர் சூழ்நிலைகளைக் கண்டு பரலோகத்தில் நம்பிக்கையை இழந்து விடுவர் சிலர் உலகத்தின் கொள்கைகளோடு இசைந்து மேலான தேவனுடைய நோக்கத்தை மறந்து விடுகிறார்கள் இனத்தை மேற்கொள்ளும் அன்பையும் தேவன் நமக்கு தருவாராக

சகோதர சகோதரிகளே அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்று ஆக்கிக்கொள்ளுங்கள் மிகவும் பொறுமையோடு காத்திருங்கள் கிறிஸ்துவின் அன்பில் நம் இருதயத்தை இணைத்துக் கொள்ளுங்கள். உலகத்தின் பால் இழுப்புண்டு போய்விடாதீர்கள் நம் கண்கள் எப்போதும் இயேசுவையே நோக்குவதாக தேவனுடைய அன்பிலே நிலைகொண்டு ஆத்தும ஆதாயம் செய்து எப்போதும் பொறுமையோடே விழிப்பாயிருங்கள் நம் கைகள் தளர்ந்து போக கூடாது ஏனெனில் இதோ சீக்கிரமாய் வரப்போகிறார். ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316